# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109465

1. District மாவட்டம் : கடலூர் PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 2/2024 Date: நாள் 01.02.2024

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் : 30.01.2024 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from நேரம் முதல் : 12.00 hrs Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.02.2024 Time நேரம் : 1500 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - I Time நேரம் : 1500 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக தட்டச்சு புகார் மனு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 80 கி.மீ. தென்மேற்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், துறையூர்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : -- District : --
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் மணிமொழி (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் பச்சமுத்து
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 78 (d) Nationality : நாட்டினம் இந்தியர் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் ---
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம் ---
(f) Occupation : தொழில் விவசாயம் (g) Address : முகவரி முருகன்குடி கிராமம், திட்டக்குடி தாலுக்கா, கடலூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

சம்பத்குமார், கிராம நிர்வாக அலுவலர், துறையூர் கிராமம், திட்டக்குடி தாலுக்கா, கடலூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

வாதியால் தாமதம்

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

நான் இன்று 01.02.2024 ஆம் தேதி மாலை 15.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, நிலையம் ஆஜரான கடலூர் மாவட்டம், திட்டக்குடி தாலுக்கா, முருகன்குடி கிராமத்தைச் சேர்ந்த பச்சமுத்து மகன் மணிமொழி என்பவர், புகார் மனுவினை என்னிடம் கொடுத்தார். அந்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு : 01.02.2024 அனுப்புநர் மணிமொழி, வயது 78, த/பெ, பச்சமுத்து, முருகன்குடி கிராமம், திட்டக்குடி தாலுகா, கடலூர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்புத்துறை, கடலூர். நான் திட்டக்குடி தாலுக்கா முருகன்குடி கிராமத்தில் யாருடைய ஆதரவும் இல்லாமல் தனியாக வாழ்ந்து வருகிறேன். எனக்கு சொந்தமாக நிலம் வீடு என எதுவும் இல்லை. நான் விவசாய கூலி செய்து

(தொடர்ச்சி பக்கம்–3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Tv. Thiruvengadam Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி …………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 1-2-2024

[signature] 01/02/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
01-02-2024 at 17.30 hrs.

Name: பெயர் P. அன்புசெல்வன்
Rank: நிலை ஆய்வாளர் No. எண் ………
ஊ.த.க.பி
கடலூர்.

வருகிறேன். எனது மனைவி பாஞ்சாலை கடந்த வருடம் உடல்நிலை சரியில்லாமல் இறந்துவிட்டார். எனக்கு இரண்டு மகள், ஒரு மகன் உள்ளனர். மகள்களை வெளி ஊரில் கல்யாணம் செய்து கொடுத்து உள்ளேன். எனது மகனுக்கும திருமணம் செய்து வைத்துவிட்டேன். அவர்கள் யாரும் என்னை கவனித்து கொள்வதில்லை. எனது மனைவி இறப்பதற்கு முன்பாக எங்க கிராமத்தில் ஒன்றரை ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுத்து கரும்பு விவசாயம் செய்தேன். இந்த கரும்பை எனது மனைவி பெயரில் பதிவு செய்து எறையூர் அம்பிகா சர்க்கரை ஆலைக்கு விற்பனை செய்தோம். அந்த கரும்புக்கான நிலுவைத்தொகை ரூ.12,531/– எனது மனைவி பெயருக்கு வந்துள்ளது. அந்த பணத்தை வாங்குவதற்கு வாரிசு சான்று தேவைப்படுகிறது. இதனால் நான் 29.01.2024 ஆம் தேதி வாரிசு சான்று வேண்டி முருகன்குடியில் உள்ள இ–சேவை மையம் மூலம் விண்ணப்பித்திருந்தேன். மேலும் எனக்கு யாருடைய ஆதரவும் இல்லாததால் முதியோர் உதவித்தொகை வேண்டி பலமுறை விண்ணப்பித்திருந்தது ஏற்கனவே நிராகரிக்கப்பட்டிருந்தது. எனவே வாரிசு சான்று மற்றும் முதியோர் உதவித்தொகைக்காக 30.01.2024ந்தேதி பகல் 12.00 மணிக்கு துறையூரில் உள்ள கிராம நிர்வாக அலுவலகம் சென்று, அங்கிருந்த கிராம நிர்வாக அலுவலர் சம்பத்குமார் என்பவரிடம் வாரிசு சான்று வேண்டி விண்ணப்பித்திருப்பதையும், முதியோர் உதவித்தொகை விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டது சம்மந்தமாக கேட்டேன். அதற்கு கிராம நிர்வாக அலுவலர் சம்பத்குமார், “ நீ எத்தனை தடவை விண்ணப்பித்தாலும் என்னை வந்து பார்த்து கவனிக்கலனா ரிஜக்ட்தான் ஆகும், வெறும் கையால முழம் போட்டா ஆகாது, எனக்கு கொடுக்க வேண்டியத கொடுத்தால் தான் வேலை ஆகும், என சொன்னார். அதற்கு நான் இ–சேவை மையத்தில் விண்ணப்பிக்கும் போதே கட்ட வேண்டிய பணத்தை கட்டிவிட்டேன் என சொன்னேன். அதற்கு அவர் நீ கட்டிய பணம் அரசாங்கத்திற்கு போக வேண்டிய பணம், எனக்கு தனியாக பணம் தரணும் என சொன்னார். அதற்கு நான் அவரிடம் எவ்வளவு பணம் என கேட்டேன். அதற்கு அவர் வாரிசு சான்று வழங்க பொதுவாக 4,000 ரூபாய் வாங்குவேன், உனக்காக வாரிசு சான்றுக்கு 2,500மும், ஓஏபிக்கு 2,000 ரூபாயும் சேர்த்து 4,500/– ரூபாய் கொண்டு வா, வாரிசு சான்று கிடைக்க ஏற்பாடு செய்கிறேன், அடுத்த பேட்ஜ் ஓஏபி போடும் போது, உன்

பெயரையும் ஓஏபி லிஸ்ட்டில் சேர்த்து, தாசில்தாரிடம் சிபாரிசு செய்து, ஓஏபி கிடைக்கவும் ஏற்பாடு செய்கிறேன்'' என்று சொல்லி அனுப்பிவிட்டார். பின்னர் நான் யோசித்து பார்த்ததில் விஏஓ சம்பத்குமாருக்கு லஞ்சம் கொடுத்து வாரிசு சான்று, ஓஏபி பெறவும் லஞ்ச பணம் கொடுக்க விருப்பமில்லாததால், என்னிடம் லஞ்சம் கேட்ட கிராம நிர்வாக அலுவலர் சம்பத்குமார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி இன்று தங்களிடம் மனு கொடுக்கிறேன். கிராம நிர்வாக அலுவலர் சம்பத்குமார் கேட்ட லஞ்ச பணம் 4,500/– ஐ கொண்டு வந்துள்ளேன். இப்படிக்கு, (Sd/-.....)(P. மணிமொழி), 1/2/2024.

Sir,

Received the above computer typed complaint on 01.02.2024 at about 15.00 hrs., and preliminary verification was made on the genuineness of the complaint through sources and found to be genuine. The integrity and antecedents of the accused were also verified through sources and found to be bad. Hence, I registered a case in Cuddalore Vigilance and Anti-Corruption in Cr.No.2/2024, U/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 01.02.2024 at 17.00 hrs., sd/-xxxxx 01/02/2024 (P.Anbalagan), Inspector of Police, V & AC, Cuddalore.

[signature] 01/02/2024.
(P.ANBALAGAN)